# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 10 வெள்ளிக்கிழமை 26.09.2025 கதிர் 321



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிச்சு-
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel






# தியாக தீபத்தின் நினைவேந்தல்!

## நல்லூரில் உணர்வெழுச்சியுடன் திரண்ட மக்கள்







யாழ்ப்பாணம், செப். 26

தமிழ் மக்களின் விடுதலைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வு இன்று யாழ்ப்பாணம் - நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. 7

## யாழ். பல்கலைக்கழகத்தில் தியாக தீபத்துக்கு அஞ்சலி



யாழ்ப்பாணம், செப். 26

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வளாகத்தில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு இன்று நடைபெற்றது. 7

## சர்வதேச நீதி கோரி தொடரும் உண்ணாவிரதப் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 26

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் இரண்டாம் நாளாக இன்று யாழ்ப் பாணத்தில் நடைபெற்றது. 7



**- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -**

# கல்வித் துறையை டிஜிட்டல் மயமாக்க திட்டம்!

கொழும்பு, செப் .26

2026ஆம் ஆண்டில் கல்வித் துறையை டிஜிட்டல் மயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி கல்வித் துறையை டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பான கொள்கைத் திட்ட வரைபை, 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமைச்சரவையில் சமர்ப்பிக்க எதிர்பார்த்திருப்பதாக கல்வி மறுசீரமைப்புக்கான டிஜிட்டல் செயலணியின் பணித்திட்டத்தை முன்வைத்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் கல்வி மறுசீரமைப்புக் குறித்த உபகுழு அண்மையில் நாடாளுமன்றில் கூடியபோது தெரிவிக்கப்பட்டது.

பிரதமரும், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சருமான (கலாநிதி) ஹரினி அமரசூரிய தலைமையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அதன்படி இந்த கலந்துரையாடலில்.

கல்வி மறுசீரமைப்புக்கான டிஜிட்டல் செயலணியினால் தயாரிக்கப்பட்ட பணித் திட்டத்தை முன்வைத்த அதிகாரிகள், ஆறு பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படும் கல்வி மறுசீரமைப்பில் இந்த டிஜிட்டல் மயப்படுத்தலை முன்னெடுப்பது குறித்துக் கவனம் செலுத்தியிருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இதற்கமைய, டிஜிட்டல் மயமாக்கல் மூலம் ஆசிரியர் பற்றாக்குறைக்கு சாதகமான பதிலை எதிர்பார்ப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

மற்றும் கல்விக்கான தகவல் தொடர்பாடல் குறித்த உபகரணங்கள் மற்றும் வளங்களை வழங்குதல், சில பேரிடர் சூழ்நிலைகளில் பாடாசலைகளைத் தொடர்ந்தும் இயங்கச் செய்தல், மாணவர்களுக்கான சிறுவர் பராயத்தை டிஜிட்டல் மயமாக்கலின் மூலம் பெற்றுக்கொடுத்தல் போன்ற துறைகளின் கீழ் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாகவும், இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஜிட்டல் மயமாக்கல் செயல்முறையை முன்னெக்க எதிர்பார்த்திருப்பதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

2025 டிசம்பர் 31ஆம் திகதியாகும்போது இணையத்தள வசதிகள் இல்லாத பாடசாலைகளுக்கு இணையத்தள வசதிகள், டிஜிட்டல் ஸ்மார்ட் போர்ட் மற்றும் கணினி அல்லது மடிக்கணினி அல்லாத பாடசாலைகளுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் குறித்த செயலணியின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்பொழுது காணப்படும் தகவல்களுக்கு அமைய நாட்டில் உள்ள 3 இரண்டாம் நிலைப் பாடசாலைகளுக்கு மின்சார வசதிகள் இல்லையென்றும், 546 பாடசாலைகளில் ஒரு கணினியோ அல்லது மடிக்கணினியோ அல்லது டப் கருவியோ இல்லையென்றும், 2088 பாடசாலைகளில் டிஜிட்டல் ஸ்மார்ட் போர்ட்கள் இல்லையென்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இங்கு உரையாற்றிய பிரதமர் ஹரினி அமரசூரிய,

எதிர்காலத்திற்காக அதிகளவு பணத்தை முதலீடு செய்து மேற்கொள்ளப்படும் கல்வித் துறையில் இந்த தனித்துவமான மாற்றத்திற்கு அனைவரின் ஆதரவும் அவசியம் என்று தெரிவித்தார்.

மேலும் கல்வி மறுசீரமைப்பு தொடர்பாகப் பொருத்தமான யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குமாறு டிஜிட்டல் செயலணியை அவர் கேட்டுக்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 2026 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு!

*கொழும்பு, செப் .26*

*2026 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம், தொழிலாளர் அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.*

*ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு எனப்படும் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை உள்ளடக்கிய வரவு செலவுத் திட்ட உரை நிதியமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதியால் நவம்பர் 7 ஆம் திகதி முனவைக்கப்படும்.*

*வரவு செலவுத் திட்டம் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 8 முதல் நவம்பர் 14 வரை 6 நாட்களுக்கு நடைபெறவுள்ளதுடன், இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு அன்று மாலை 6:00 மணிக்கு நடைபெறும்.*

*வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு அல்லது குழுநிலை விவாதம் நவம்பர் 15 முதல் டிசம்பர் 5 ஆம் திகதி வரை 17 நாட்களுக்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், வரவு செலவுத் திட்ட மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 5 ஆம் திகதி மாலை 6:00 மணிக்கு நடைபெறும் என்றும் நாடாளுமன்றம் தெரிவித்துள்ளது*

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பிவீட்) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய
இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases

- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியழுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியழுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments

- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்

Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# ஊழல் நிறைந்த அரச நிறுவனங்கள்

கொழும்பு, செப் .26

ஊழல் நிறைந்த அரச நிறுவனங்கள் தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் தலைவர் நீல் இத்தவெல வெளிப்படுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றையதினம் இலங்கை நிர்வாக வல்லுநர்கள் நிறுவனம் மற்றும் இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் ஆகியவற்றால் விரிவுரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போதே அவர் இந்த தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

தேசிய வளர்ச்சிக்கான நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சி என்ற கருப்பொருளின் கீழ் இந்த விரிவுரை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இங்கு இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் தலைவர் நீல் இத்தவெல கருத்து தெரிவிக்கையில்,

2024ஆம் ஆண்டில், தேசிய ஊழல் எதிர்ப்பு செயல் திட்டத்தை தயாரிப்பதற்காக நாங்கள் ஒரு கணக்கெடுப்பை நடத்தினோம்.

அதில் பொதுமக்கள், இலஞ்சம் அல்லது ஊழலுக்கு ஆளாகக்கூடிய நிறுவனங்களாகத் தேர்ந்தெடுத்த 10 நிறுவனங்களைப் பற்றி நான் உங்களுக்கு கூறுகிறேன்.

முதலாவது பொலிஸ், இரண்டு அரசியல், மூன்று சுங்கம். மேலும், குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை, பாடசாலை மற்றும் அமைச்சு.

அத்துடன் காணிப் பதிவு அலுவலகங்கள், மாகாண சபைகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், பிரதேச செயலகங்கள், பதிவாளர் நாயக அலுவலகம் போன்றவை பொதுமக்களின் கருத்தாகும்.

இருப்பினும், பொருளாதாரத்தை முக்கியமாக பாதிக்கும் 5 நிறுவனங்களை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம்.

ஒன்று சுங்கம், இரண்டாவது நிறுவனம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி திணைக்களம்.

அதேபோன்று மதுவரித் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், மோட்டார் வாகனப் பதிவு அலுவலகம்.

அதேபோன்று மேலும் நிறுவனங்கள் உள்ளன. தேசிய இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரண அதிகாரசபை, புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம்.

இது போன்ற நிறுவனங்கள் மூலம் ஊழல் பரவலாம். இது போன்ற நிறுவனங்களில் ஊழலிக்கு மேல் ஊழல் இடம்பெறுகின்றன. அவற்றின் மூலம், ஊழல் செய்பவர்களுக்கு ஒரு புகலிடம் உருவாக்கப்பட்டு, பணமோசடிக்கு அதிக வாய்ப்பு வழங்கப்படுகிறது.

பின்னர், நான் குறிப்பிட்ட கணக்கெடுப்பில், ஊழல் கலாச்சாரத்திற்கு பங்களிக்கும் காரணிகளாக பொதுமக்கள் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டனர்.

நாட்டில் சரியான சட்டம் ஒழுங்கு இல்லாததே அதற்குக் காரணம். நாட்டில் ஊழல் கலாச்சாரம் உருவாகிறது. மேலும், இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக பொதுமக்கள் நடவடிக்கை எடுப்பதில்லை என மக்கள் கூறியதாக- அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நவீன பாதுகாப்பு அம்சங்களுடன் வாகன இலக்கத்தகடுகள்! அமைச்சர் பிமல் அறிவிப்பு



கொழும்பு, செப் .26

புதிய பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய வாகன இலக்கத்தகடுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று வாய்மூல வினாக்களுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அமைச்சர் பிமல் ரத்நாயக்க,

தற்போது சந்தையில் வாகன இலக்கத்தகடுகள் இல்லாத பெருமளவான வாகனங்கள் உள்ளன.

முந்தைய வர்த்தக நிறுவனங்களுடன் அரசியல் நடவடிக்கை, ஊழல் மற்றும் பொறுப்பற்ற தன்மையால் மோட்டார் வாகனத் திணைக்களம் சுமார் 10 ஆண்டுகளாக முன்னேறவில்லை என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

புதிய சாரதி அனுமதிப் பத்திரம் தயாரிக்கப்படும் என்றும், வாகன இலக்கத்தகடுகள் இல்லாத வாகனங்களுக்கு அடுத்த வாரம் தற்காலிக தீர்வுகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## தேசிய குத்துச்சண்டைப் போட்டியில் முல்லைத்தீவு மாணவிகள் சாதனை



2025 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட குத்துச்சண்டைப் போட்டி செப்டெம்பர் மாதம் 21 முதல் 25 வரை கொழும்பு றோயல் கல்லூரியில் இடம்பெற்றது.

இப்போட்டியில் வுஆயு அக்கடமியின் ஊடாக மாவட்ட குத்துச்சண்டைப் பயிற்றுனர் தேசிந்தனின் வழிகாட்டுதலின் கீழ், முஃஇரணைப்பாலை றோ.க.ம.வி மாணவி மோகனதாஸ் அபிசாளினி 16 வயதுக்குட்பட்ட 50-52 கிலோ பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்று பாடசாலைக்கும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கும், வடமாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இது குறித்த பாடசாலை வரலாற்றில் தேசிய ரீதியில் பெறப்பட்ட முதல் பதக்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாணவியின் வெற்றிக்கு பாடசாலை அதிபரின் ஊக்கமும், பெற்றோரின் உறுதுணையும் பெரிதும் காரணமாக அமைந்துள்ளது.

மேலும் கடந்த ஆகஸ்ட் 25 முதல் 30 வரை காலி மாநகர சபை மைதானத்தில் நடைபெற்ற 49 ஆவது தேசிய குத்துச்சண்டைப் போட்டியில் அதே வுஆயு அக்கடமியின் பயிற்சியில் பங்கேற்ற இந்திரசேகரம் லதுர்சனா 50-52 கிலோ பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். (ஐ)

## மீரிகம பிரதேசத்தில் கஞ்சா உற்பத்தி– அநுர அரசிடம் ஓமல்பே சோபித தேரர் கேள்வி!

*கொழும்பு, செப் .26*

*மீரிகம பிரதேசத்தில் கஞ்சா உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளமை தொடர்பில் ஓமல்பே சோபித தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.*

*அகில இலங்கை மகா பௌத்த சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இது மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,*

*கஞ்சா உற்பத்தியை நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டும் ஒரு வருமான மூலமாகப் பார்ப்பதை அங்கீகரிக்க முடியாது.*

*அப்போதைய இராஜாங்க அமைச்சர் டயானா கமகே இதில் பிரதான காரண கர்த்தாவாக செயற்பட்டார். கடந்த அரசாங்கத்தால் இதற்கான முன்மொழிவு முன்வைக்கப்பட்ட போது மகா சங்கத்தினர் உட்பட சகல மதத் தலைவர்களும் கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டனர்.*

*இறுதியில் இந்த யோசனையை முன்வைத்தவர்கள் முற்றாக மக்களால் நிராகரிக்கப்பட்டு தற்போது காணாமல் போயுள்ளனர்.*

*இது தொடர்பில் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினரும்தற்போதையஜனாதிபதியுமான அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்திடம் நாடாளுமன்றத்தில் சில கேள்விகளை எழுப்பினார்.*

*'இந்த கஞ்சா உற்பத்தி வெற்றியளிக்கும் வேலைத்திட்டம் என நீங்கள் கூறினால் அதற்கான சந்தை என்ன எனக்கூறுங்கள்? எந்தெந்த நாடுகளுக்கு இவற்றை கொள்வனவு செய்யப் போகின்றன?, எந்த அளவுகளில் அவர்கள் இவற்றை கொள்வனவு செய்யப் போகின்றனர்?. ஏதேனுமொரு வகையில் வெளிநாடுகள் இவற்றை கொள்வனவு செய்யாவிட்டால் உற்பத்திகளுக்கு என்னவாகும்?' என்ற கேள்விகளே அவரால் அப்போதைய அரசாங்கத்திடம் கேட்கப் பட்டன.*

*ஆனால் இதில் எந்தவொரு கேள்விக்கும் அன்று பதில்கிடைக்கவில்லை. இன்று நாம் அதே கேள்விகளை ஜனாதிபதி அநுரவிடம் கேட்கின்றோம்,*

*அன்று நிராகரிக்கப்பட்ட சடலங்களை இன்று மீண்டும் உயிர்ப்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கின்றதா? தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களிப்பதற்கு இதுவும் ஒரு பிரதான காரணியாகக் காணப்பட்டது.*

*எனவே ஆட்சியாளர்கள் இதனை மறந்து விடக் கூடாது. நிராகரிக்கப்பட்ட ஒரு வேலைத்திட்டத்தை மீள ஆரம்பிக்க தீர்மானித்தால் அரசாங்கம் அது குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.*

*எமக்கு இதுவரை கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் 7 நிறுவனங்களுக்கு இது குறித்த பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, அவற்றுடன் ஒப்பந்தங்களும் கைசாத்திடப்பட்டுள்ளன.*


*மீரிகம பிரதேசத்தில் 64 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வாறு கஞ்சா உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது. இது தொடர்பில் அரசாங்கம் எந்தவொரு பகிரங்க கலந்துரையாடல்களையும் முன்னெடுக்கவில்லை- என அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*

# ரூ.10,000 கோடி நிதி தர மறுத்தாலும் மும்மொழியை ஏற்க மாட்டோம்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திட்டவட்டம்

ரூ.10,000 கோடி நிதி தர மறுத்தாலும் மும்மொழி கொள்கையை ஏற்க மாட்டோம் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக திமுக முப்பெரும் விழாவில் பேசிய அவர் நான் சனிக்கிழமை மட்டும் வீட்டை விட்டு வெளியே வரும் ஆள் இல்லை. வாரத்துக்கு 5 நாள் வெளியூரில்தான் இருப்பேன், சனி மட்டும் வீட்டை விட்டு வெளியே வரும் ஆள் நான் அல்ல. மகளிர் உரிமைத் தொகையை 90 சதவீத மக்கள் மருத்துவத்துக்கு பயன்படுத்துகின்றனர். மகளிர் உரிமைத் தொகை இன்னும் அதிகம்பேருக்கு கிடைக்கும். அனைவருக்கும் மகளிர் உரிமைத் தொகை சென்றடைய விதிகள் தளர்த்தப்பட்டுள்ளது. மகளிர் உரிமைத் தொகை அதிகம் பேருக்கு கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மும்மொழி கொள்கையை ஏற்றுக் கொள்ள வில்லை என்றால் கல்வி நிதியை விடுவிக்க மாட்டோம் என கூறியிருக்கிறார் தர்மேந்திர பிரதான். இந்தி திணிப்பை நடைமுறைக்கு கொண்டு வர நினைக்கும் ஒன்றிய அரசு ரூ.10,000 கோடி தந்தாலும் மும்மொழி கொள்கையை ஏற்க மாட்டோம். ஒன்றிய பாஜக அரசு ரூ.2000 கோடி அல்ல ரூ.10000 கோடி நிதி கொடுத்தாலும் மும்மொழி கொள்கையை ஏற்க மாட்டோம். ஜி.எஸ்.டி.யை குறைத்துவிட்டோம் என்று ஒன்றிய அரசு நாடகம் ஆடுகிறது, அதிமுக அதற்கு ஜால்ரா அடிக்கிறது. ஜி.எஸ்.டி. வரியை உயர்த்தியது யார்? என்று கேள்வி எழுப்பியுள்ளார். (ஐ)





## இளையராஜாவின் இசையை வணிக ரீதியாக பயன்படுத்தி சோனி நிறுவனம் ஈட்டிய வருமானம் எவ்வளவு? ஐகோர்ட் கேள்வி

இளையராஜாவின் இசையை வணிக ரீதியாக பயன்படுத்தி சோனி நிறுவனம் ஈட்டிய வருமானம் எவ்வளவு? என வருமானம் தொடர்பான விவரங்களை சோனி நிறுவனம் தாக்கல் செய்ய சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சோனி மியூசிக் என்டர்டைன்மென்ட், எக்கோ ரெகார்டிங், ஓரியண்டல் ரெக்கார்ட்ஸ் நிறுவனங்களுக்கு எதிராக இளையராஜா வழக்கு தொடர்ந்துள்ளார். எனது இசை படைப்புகள் காப்புரிமை சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டது. தனது பாடல்களை சோனி நிறுவனம் தவறாக பயன்படுத்தி வருமானம் ஈட்டி வருவதற்கு தடை விதிக்க வேண்டும் என்று மனுவில் தெரிவித்துள்ளார். (ஐ)




## தமிழ்நாட்டின் புதிய டிஜிபி தொடர்பாக டெல்லியில் யுபிஎஸ்சி ஆலோசனை: தலைமை செயலாளர் பங்கேற்பு

தமிழ்நாட்டின் புதிய டிஜிபி தேர்வு தொடர்பாக தற்போது யுபிஎஸ்சியின் தலைமை அலுவலகத்தில் ஆலோசனை நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு அரசின் சார்பாக தலைமை செயலாளர் முருகானந்தம், உள்துறை செயலாளர் தீரஜ்குமார் ஆகியோர் இந்த ஆலோசனையில் பங்கேற்றுள்ளனர். யுபிஎஸ்சியின் தலைவர் ஜெகதீஷ்குமார் தலைமையில் இந்த ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. மாநில அரசின் சார்பாக வழங்கப்பட்ட பரிந்துரை பட்டியலில் இருந்து ஒருவரை இறுதி செய்வதற்கான ஆலோசனை நடைபெற்று வருகிறது.

தற்போது பொறுப்பு டிஜிபியாக உள்ள வெங்கட்ராமனுக்கு பிறகு புதிய டிஜிபியாக யார் நியமனம் செய்யப்படுகிறார்கள் என்பது தொடர்பான பரிந்துரை பட்டியலை தமிழ்நாடு அரசு சார்பாக தலைமை செயலாளர் முருகானந்தம் நிறைவு கூட்டத்தில் முன்வைத்து அதிலிருந்து இருவரை தேர்வு செய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லை என்றால் யுபிஎஸ்சியின் சார்பாக முன்மொழியப்படும் பெயர்களில் ஒருவர் புதிய டிஜிபியாக தமிழகத்திற்கு நியமனம் செய்யப்படுவார் என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பூம்புகாரில் கடலுக்கு அடியில் கட்டடங்கள்? பண்டைய தமிழர்களின் வரலாறு குறித்து ஆழ்கடலில் தொல்லியல்துறை 7வது நாளாக ஆய்வு!!



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் கடலில் பண்டைய தமிழர்களின் வரலாறு குறித்து கடல்சார் ஆய்வு ஆலோசகர் பேராசிரியர் ராஜன் தலைமையில் தொல்லியல்துறையினர் 8 பேர் உட்பட 20 பேர் கடலில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள பூம்புகார் மூவேந்தர் காலம் சங்க இலக்கியம் மற்றும் காப்பியங்களின் மூலம் மிகப்பெரிய கடல் வணிக துறைமுகமாக அறியப்படுகிறது. காவேரிபூம்பட்டினமாக இருந்த பூம்புகாரில் பண்டைய தமிழர்களின் நாகரீகத்தின் தொன்மையை ஆராயும் விதமாக இந்திய கடல்சார் பல்கலைக்கழக உதவியுடன் தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில் ஒருவாரமாக ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நிலையில் கடலுக்கு அடியில் தொல்லியல் துறை கல்வி, கடல்சார் ஆய்வு ஆலோசகர் பேராசிரியர் ராஜன் தலைமையில் தமிழ்நாடு தொல்லியல் துறை அலுவலர்கள் உட்பட 20 பேர் கொண்ட வல்லுநர் குழுவினர், கரையில் இருந்து 5.5 கி.மீ. தூரத்தில் 22 மீட்டர் ஆழத்தில், 7 நாட்களாக ஆய்வு பணிகளை மேற்கொண்டுள்ளனர். அந்த பகுதியில் தமிழர்களின் பழைய சுவடுகள் கண்டறியப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. வணிக நகரம் அமைந்ததற்கான கட்டிடங்கள் கடலுக்குள் இருப்பதை கண்டுபிடித்துள்ளதாகவும் அதிகாரிகள் தகவல் அளித்துள்ளன. (ஐ)

## முதல் முறையாக ரயிலில் இருந்து ஏவப்பட்ட அக்னி பிரைம் ஏவுகணை சோதனை வெற்றி



முதல் முறையாக ரயிலில் இருந்து ஏவப்பட்ட அக்னி பிரைம் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக வெற்றியடைந்துள்ளது. இதனை தொடர்ந்து விஞ்ஞானிகளுக்கு அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்து உள்ளார். அக்னி பிரைம் ஏவுகணை 2 ஆயிரம் கி.மீ தூரம் சென்று தாக்கும் திறன் கொண்டது. இது மேம்பட்ட தொழில்நுட்ப அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்த ஏவுகணை முதல் முறையாக ரயில் மீதான மொபைல் லாஞ்சரில் இருந்து ஏவப்பட்டது. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு விஞ்ஞானிகள் இந்த சோதனையை செய்து வெற்றி பெற்றுள்ளனர். ரயிலில் இருந்து ஏவுகணைகளை ஏவும் திறன் கொண்டா நாடாக இந்தியா மாறியுள்ளது. இதற்காக டிஆர்டிஓ விஞ்ஞானிகளுக்கு பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் ராஜ்நாத் சிங் தனத எக்ஸ் தள பதிவில், "ரயிலில் உள்ள மொபைல் லாஞ்சரில் இருந்து அக்னி ஏவுகணை சோதனை நிகழ்த்தப்பட்டது. இது, 2000 கிமீவரை சென்று தாக்கும்திறன் உட்பட பல்வேறு அம்சங்களைக் கொண்டுள்ளது. சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ரயில் மீதான மொபைல் லாஞ்சரில் இருந்து மேற்கொள்ளப்பட்ட முதல் ஏவுகணை சோதனை சிறப்பாக செய்யப்பட்டது. இந்த வெற்றிகரமான சோதனை இந்தியாவை ரயில் மீதான மொபைல்லாஞ்சரில் இருந்து ஏவுகணைகள் ஏவும் திறன் கொண்ட நாடாக மாற்றி உள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)





# ஆப்பன்ஹைமரின் நிழலில்

மனித வரலாற்றில் முதலாம் உலகப் போரானது எத்தனையோ மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அவற்றில் பெரிதும் பேசப்படாத ஓர் அம்சம் இருக்கிறது. ஆண்களில் பெரும்பான்மையானோர் போருக்குச் சென்ற பிறகு வேறு வழியின்றி பல கதவுகள் பெண்களுக்காகத் திறக்கப்பட்டன. பெண்களை வேலைக்கு அனுப்பத் தயங்கிய சமூகம் என்ன செய்வதென்று தெரியாமல், வேலைக்கு ஆள் இல்லாத ஒரே காரணத்தால் பெண்களுக்கு வாய்ப்புகளை வழங்கியது. போர் முடியும் தறுவாயில் 30 இலட்சம் பெண்கள் தொழிற்சாலைகளில் வேலையில் இருந்ததாக ஒரு தரவு கூறுகிறது. ஆள் இல்லை என்று தெரிந்ததும், “நான் இந்த வேலைக்கு வருகிறேன், இதற்கான தகுதிகள் என்னிடம் உண்டு” என்று பல பெண்கள் அரசுக்கு ஆர்வத்துடன் கடிதம் எழுதினர். ஆண்கள் போருக்குச் சென்றதால் பல்கலைக்கழகங்கள், அருங்காட்சியகங்கள், பள்ளிகள், அரசு அலுவலகங்கள் என்று பல துறைகளில் பணியிடங்கள் காலியாகவே, பெண்கள் அந்த வேலைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர்.



உதாரணமாக, திறமையான தொல்லுயிரியலாளராக இருந்தும் பெண் என்பதாலேயே டார்தி பேட்டுக்கு வேலை கிடைக்கவில்லை. லண்டன் இயற்கை வரலாறு அருங்காட்சியகத்தில் அந்தக் காலகட்டத்தில் பெண்களை வேலைக்கு எடுக்கும் வழக்கம் இருக்கவில்லை. ஆனால், வேலையில் இருந்த ஆண்கள் போருக்குச் சென்றுவிட்டதால் அந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்ட டோரதி, “நான் இந்தப் பணியைச் செய்கிறேன்” என்று தானாகவே முன்வந்தார். சிறப்பான தொல்லுயிர் ஆராய்ச்சியாளராகவும் அருங்காட்சியகத்தின் முக்கிய அலுவலராகவும் தனது திறமையை வெளிப்படுத்தினார்.

### எலிசபெத் க்ரேவ்ஸ்

கேனரி பெண்களைத் தெரியுமா? கேனரி என்பது மைக்ரோனீசியத் தீவுகளைச் சேர்ந்த ஒரு மஞ்சள் நிறப்பறவை. முதலாம் உலகப் போர் காலத்தில் பல பிரிட்டிஷ் பெண்கள் ஆயுதத் தொழிற்சாலைகளில் பணியமர்த்தப்பட்டனர். இந்தத் தொழிற்சாலைகளில் சிலவற்றில் டி.என்.டி உற்பத்தி செய்யப்பட்டது. தொடர்ந்து டி.என்.டியை எதிர்கொண்டதால் இந்தப் பெண்களின் தோலே ஆரஞ்சு கலந்த மஞ்சள் நிறமாக மாறிவிட்டதாம்! இது கேனரி பறவையின் நிறத்தை நினைவுபடுத்தியதால் இந்தப் பெண்களை கேனரி பெண்கள் என்று அழைத்தார்கள். தோல் நிறமாற்றம் மட்டுமல்லாமல் தலைவலி, குமட்டல் போன்ற பிற பிரச்சினைகளும் இந்தப் பெண்களுக்கு ஏற்பட்டன. காலப்போக்கில் தொழிற்சாலை நிர்வாகங்கள் பெண்களுக்கு முகக்கவசங்கள் வழங்கத் தொடங்கியதும் இந்தப் பிரச்சினை குறைந்தது.

முதலாம் உலகப் போரின்போது ஆயுதங்கள் மற்றும் மருந்துகளைத் தயாரிப்பதற்கான அடிப்படை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவேண்டியிருந்தது. இதற்கு நிறைய வேதியியலாளர்கள் தேவைப்பட்டனர். இந்தத் தேவையைப் பூர்த்தி செய்தது பெண் அறிவியலாளர்களே. நைட்ரிக் அமிலத்தை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கான செயல்முறையை வடிவமைத்த மே சிபில் லெஸ்லி, மருத்துவத் துறைக்கான மயக்க மருந்து மற்றும் வலி நிவாரணிகளை உருவாக்கித் தந்த ஜாஸ்லின் ஃபீல்ட் தார்ப், வில்வாத நச்சுக்கான முறிவைக் உருவாக்கிய ம்யூரியல் ராபர்ட்சன் ஆகியோர் இதில் முக்கியமானவர்கள்.

“பெண்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதாலேயே எல்லாம் சரியாகிவிட்டது என்று சொல்லிவிட முடியாது” என்று எழுதுகிறார் ஆராய்ச்சியாளர் பட்ரிசியா ஃபரா. அறிவியல்ரீதியான பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டாலும் பணிச்சூழலில் பெண்களுக்குப் பல சவால்கள் இருந்தன. பெரிய இயந்திரங்களை இயக்கும்போதும் தொழிற்சாலைகளில் பணிபுரியும்போதும்கூட நீண்ட பாவாடைகள்தாம் அணியவேண்டும் என்று அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். பேண்ட் அணிவது தடை செய்யப்பட்டிருந்தது. இது பெண்களுக்குப் பெரிய அசௌகரியத்தைத் தந்தது. போர்க்காலத்தில் வேலைக்கு எடுக்கப்பட்ட பல பெண்களுக்கு ஆண்களுக்குத் தரப்பட்ட ஊதியத்தில் 60% மட்டுமே தரப்பட்டது.



அறிவியல் ஆர்வத்துடன் தானாகவே வேலை செய்ய முன்வந்த பெண்களுக்கு 1918இல் ஒரு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. உலகப் போர் முடிந்ததும் ஆண்கள் வேலைக்குத் திரும்பினர். “சரி, நீங்கள் கிளம்பலாம்” என்று பல நிறுவனங்களும் அமைப்புகளும் உடனடியாகப் பெண்களை வேலையை விட்டு நிறுத்தின. “பெண்கள் வேலைக்குச் செல்வது ஆண்களின் வேலை வாய்ப்பைப் பாதிக்கும்” என்கிற கருத்து காட்டுத்தீ போல் பரவியது. தங்களது ஆர்வத்தால் உந்தப்பட்டு குறைவான சம்பளத்தில் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்த பெண் அறிவியலாளர்களில் கிட்டத்தட்ட அனைவரும் ஒரே நாளில் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

இரண்டாம் உலகப் போரின் சூழல் வேறு மாதிரியாக இருந்தது. அந்தக் காலகட்டத்திலும் ஆண்கள் இல்லாத சூழலில்தான் அதிகமான பெண்கள் வேலைக்கு வந்தனர் என்றாலும் அதற்குள் ஓரளவு சமூக மாற்றம் வந்திருந்தது. பெண்களுக்கான ஓட்டுரிமை உள்ளிட்ட பலவும் பேசுபொருளாகியிருந்தன. ஆகவே பணிச்சூழலில் மிகச் சிறிய அளவில் முன்னேற்றம் இருந்தது.

இரண்டாம் உலகப் போரின்போது பணியாற்றிய பெண் அறிவியலாளர்களில் முக்கியமானவர்கள் லாஸ் அலமோஸில் இருந்த பெண்கள். ஜூலை 2023இல் வெளியான ஆப்பன்ஹைமர் திரைப்படம், அணுகுண்டு எப்படி உருவாக்கப்பட்டது என்பதை விரிவாகக் காட்டியது. லாஸ் அலமோஸ் என்கிற இடத்தில் அணுகுண்டு ஆராய்ச்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டதையும் அந்தப் படத்தில் காட்டியிருப்பார்கள். மான்ஹாட்டன் திட்டம் என்கிற பெயரில் லாஸ் அலமோஸில் இயங்கிய மிகப்பெரிய ஓர் ஆய்வுக்களத்தில் பல பெண்கள் பணியாற்றினார்கள்.

லாஸ் அலமோஸில் இருந்த மொத்த பணியாளர்களில் 11% பெண்கள் என்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள். அணுகுண்டு உருவாக்கம் என்பது அறத்துக்கு எதிரானது. அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. ஆகவே அணுகுண்டு தொடர்பான அறிவியலை எந்த வகையிலும் உயர்த்திப் பேச முடியாது. அந்த ஆராய்ச்சியில் பெண்களின் பங்களிப்பை மட்டுமே இங்கு விவாதிக்கிறோம்.

அங்கு இருந்த பெண் ஆராய்ச்சியாளர்களில் முக்கியமானவர் லில்லி ஹார்னிக். முதலில் இவரது கணவருக்கு லாஸ் அலமோஸில் வேதியியலாளர் பணி கிடைத்தது. ஆகவே லில்லியும் அங்கு சென்று தங்கினார். பணியாளர்களின் மனைவிமார்கள் படித்தவர்களாக இருந்தால் அவர்களுக்கு தட்டச்சுத் தேர்வு வைத்து, அவர்களை குமாஸ்தா வேலைக்கு எடுத்துக் கொள்வது லாஸ் அலமோஸின் நடைமுறை. தேர்வின்போதுதான் லில்லியின் அறிவியல் பின்புலமே அங்கு இருந்தவர்களுக்குத் தெரியவந்தது. உடனே லில்லி வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். பல ஆய்வுகளில் ஈடுபட்டார். முதல் அணுகுண்டு சோதனையை ஆளில்லாத தீவில் நடத்தவேண்டும் என்கிற மனுவிலும் அவர் கையெழுத்திட்டார். ஆய்வுக்குழுவில் இருந்தாலும் ஆண் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து லில்லி தள்ளியே வைக்கப்பட்டார். ஆய்வு விவாதங்களின்போது அவர் அழைக்கப்படவில்லை. “பல ஆண் அறிவியலாளர்கள் எங்களைச் சமமானவர்களாக நடத்தவில்லை, எங்களை உதவியாளர்களாகத்தான் பார்த்தார்கள்” என்று லில்லி குறிப்பிடுகிறார். இதுவே பெரும்பான்மையான பெண் அறிவியலாளர்களின் நிலையாக இருந்தது.

### லாஸ் அல்மோஸ்

தூய்மையான யுரேனியத்தைப் பிரித்தெடுக்க ஆராய்ச்சி மேற்கொண்ட எல்டா ஆண்டர்சன், அணுகுண்டு சோதனைக்கருவிகளை உருவாக்கிய ஜேன் ஹெய்ட்டார்ன், அணுகுண்டு ஆராய்ச்சியில் பங்கெடுத்த எலிசபெத் ரிட்டில் க்ரேவ்ஸ், அணுகுண்டால் பூமியில் ஏற்படும் அதிர்வுகளை ஆராய்ந்து அணுகுண்டு வடிவமைப்புக்கு உதவிய நார்மா க்ராஸ் என்று பல பெண்கள் லாஸ் அலமோஸ் ஆராய்ச்சிகளில் பங்கெடுத்தார்கள். இவர்களில் எலிசபெத் ரிட்டில் க்ரேவ்ஸின் கதை சுவாரசியமானது.

நியூட்ரான் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக எலிசபெத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது கணவர் அல் க்ரேவ்ஸ்/ம் இயற்பியலாளர் என்பதால் இருவரும் சேர்ந்து லாஸ் அலமோஸ்/க்கு வந்தனர். கர்ப்பிணியாக இருந்ததால் நேரடிக் கதிர்வீச்சு உள்ள ஆய்வுக்கூடங்களில் இருந்து மிகவும் தொலைவில் இருந்தபடி எலிசபெத் வேலை செய்தார். 1945ஆம் ஆண்டு ட்ரினிடி சோதனை நடந்தபோது அவருக்குத் திடீரென்று பிரசவ வலி எடுத்தது. உடனடியாகத் தன்னை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்று எலிசபெத் தகவல் அனுப்பினார். ஆனால், வெடிகுண்டு சோதனை நடக்க சில நொடிகளே இருந்ததால் உடனே உதவி கிடைக்கவில்லை. பொறுமை காத்த எலிசபெத், வெடிகுண்டு வெடித்த பிறகு தான் செய்யவேண்டிய சோதனைகளை எல்லாம் செய்து முடித்து கணக்குகளை மேற்கொண்டார். பிரசவ வலியோடு எல்லாவற்றையும் செய்தார். அறிவியல் ஆய்வுக்காக வைத்திருந்த ஸ்டாப் வாட்ச் கடிகாரத்தின் மூலம் வலி ஏற்படும் இடைவெளியைக் கணக்கெடுத்தார். அடுத்த சில மணி நேரத்தில் அவருக்கு உதவி கிடைத்தது. ஓர் ஆரோக்கியமான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

“பிரசவ வலியைப் பெண்கள் நினைத்தால் பொறுத்துக்கொள்ளலாம்” என்று யாராவது உதாரணம் காட்டுவதற்கான கதையாக இதைப் பார்க்கக் கூடாது. தன்னையே மறந்து அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபடும் ஆண் அறிவியலாளர்களுக்கு நிகராகப் பெண்களும் அறிவியலில் உழைப்பைத் தந்திருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டவே இந்த நிகழ்வை விரிவாகச் சொல்லியிருக்கிறேன்.

பல்வேறு விதங்களில் உழைப்பைக் கொடுத்தாலும் லாஸ் அலமோஸைச் சேர்ந்த பெண்களுக்குப் போதிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதே உண்மை. அட, இவ்வளவு ஏன்? ஆப்பன்ஹைமர் திரைப்படத்தில்கூட அவர்களின் பங்களிப்பு பேசப்படவில்லை. அவர்களது ஆராய்ச்சிகள் குறைந்தபட்சம் போகிற போக்கில்கூடக் காட்டப்படவில்லை. “மான்ஹாட்டன் திட்டத்தில் முக்கியப் பங்களித்த பல பெண் அறிவியலாளர்கள் இந்தப் படத்தில் இடம்பெறவில்லை” என்று எழுதுகிறார் கேட்டி ஹஃப்னர். ஆப்பன்ஹைமருடன் பணியாற்றிய பல ஆண் அறிவியலாளர்கள் (7ஆம் பக்கம் பார்க்க)

# பப்ஜி விளையாட்டில் தோல்வி அடைந்த ஆத்திரத்தில் குடும்பத்தையே கொலை செய்த சிறுவனுக்கு 100 ஆண்டுகள் தண்டனை :பாகிஸ்தான் நீதிமன்றம் அதிரடி



பப்ஜி விளையாட்டில் தோல்வி அடைந்த ஆத்திரத்தில் தனது தாய் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரை துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டு கொலை செய்த 17 வயது சிறுவனுக்கு 100 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து பாகிஸ்தான் நீதிமன்றம் அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது. பப்ஜி விளையாட்டிற்கு அடிமையான பாகிஸ்தானின் லாகூர் நகரைச் சேர்ந்த செய்னலி என்ற சிறுவன், கடந்த 2022ம் ஆண்டு தனது 14 வயதில் நிகழ்த்திய கொடூர சம்பவம் அந்நாட்டையே உலுக்கியது. செல்போனில் பப்ஜி விளையாடி தோல்வியுற்று அதிருப்தியில் இருந்த சிறுவனை எந்நேரமும் பப்ஜி விளையாடுவதாக கூறி அவனது தாய் திட்டியுள்ளார்.

இதில் ஆத்திரம் அடைந்த சிறுவன், சிறிது நேரம் கழித்து, தனது தாயின் துப்பாக்கியை கொண்டு உறக்கத்தில் இருந்த அவரை கண்மூடித்தனமாக சுட்டுள்ளார். அதனை தொடர்ந்து வீட்டில் இருந்த 20 வயதுடைய தனது அண்ணனையும் 15 மற்றும் 10 வயதுடைய இரு சகோதரிகளையும் துப்பாக்கியால் சுட்டதில் 3 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த நிலையில் லாகூர் நீதிமன்றத்தில், நடைபெற்று வந்த வழக்கு விசாரணையின் போது, குற்றம் நிரூபிக்கப்பட்டதால் சிறுவனுக்கு 100 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிபதி அதிரடி உத்தரவு பிறப்பித்தார். சிறுவன் என்பதால் வயதை காரணம் காட்டி, மரண தண்டனை விதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)

## பிரசார நிதி முறைகேடு முன்னாள் பிரான்ஸ் அதிபர் சர்கோசி குற்றவாளி



முன்னாள் பிரான்ஸ் அதிபர் சர்கோசி நிகோலஸ் லிபியா பிரச்சார நிதி வழக்கில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளார். கடந்த 2007ம் ஆண்டு லிபியத் தலைவர் மொயம்மர் கடாபி அரசிடமிருந்து சட்டவிரோதமாக பிரச்சார நிதியை பெற்றதாக பிரான்சு முன்னாள் அதிபர் நிகோலஸ் சர்கோசி மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த வழக்கின் விசாரணையில் முன்னாள் அதிபர் சர்கோசி குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளது. இதில் உடனடியாக அவருக்கு நீதிமன்றம் தண்டனை விதிக்கவில்லை. இந்த தீர்ப்பை எதிர்த்து சர்கோசி மேல்முறையீடு செய்யலாம். (ஐ)

## ஐ.நா சபையில் எனக்கு எதிராக 3 முறை நாசவேலை: டிரம்ப் பரபரப்பு குற்றச்சாட்டு



அமெரிக்க அதிபர் டிரம்ப் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு அவமானம் நடந்தது. ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று முறை நாசவேலை நடந்தது. முதலாவதாக உரையாற்ற மாடிக்கு செல்லும் எஸ்கலேட்டர் செயலிழந்தது. நானும், மெலனியாவும் கைப்பிடியை இறுக்கமாக பிடித்து கொண்டோம். இல்லையென்றால் பேரழிவாக இருந்திருக்கும். இது முற்றிலும் நாசவேலை.

எஸ்கலேட்டரை அணைத்தவர்கள் கைது செய்யப்பட வேண்டும். பின்னர், உலகம் முழுவதும் லைவில் கோடிக்கணக்கான மக்கள் மற்றும் அரங்கில் முக்கியமான தலைவர்கள் இருந்த கூட்டத்தின்முன் நான் நின்றபோது, எனது டெலிப்ராம்ப்டர் வேலை செய்யவில்லை. 3வதாக, உரையை நிகழ்த்திய பிறகு, அந்த ஆடிட்டோரியத்தில் ஸ்பீக்கர் வேலை செய்யவில்லை. இது தற்செயல் நிகழ்வு அல்ல. இது நாசவேலை.

அவர்கள், தங்களை பற்றி வெட்கப்பட வேண்டும். இந்த கடிதத்தின் நகலை நான் ஐநா பொதுச்செயலாளருக்கு அனுப்புகிறேன். உடனடியாக விசாரணையை கோருகிறேன். ஐக்கிய நாடுகள் சபையால் வேலையை செய்ய முடியவில்லை என்பதில் ஆச்சரியமில்லை. எஸ்கலேட்டரில் உள்ள அவசர நிறுத்த பொத்தானை பாதுகாப்பான இடத்திற்கு மாற்ற வேண்டும். இதுகுறித்து ரகசிய போலீஸ் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு கூறியுள்ளார். (ஐ)




## டிரோன் ஊடுருவல்: டென்மார்க் விமான நிலையம் மூடல்

டிரோன்கள் ஊடுருவல் காரணமாக டென்மார்க்கில் உள்ள ஆல்போர்க் விமான நிலையம் மூடப்பட்டது. டென்மார்க் நாட்டின் தலைநகர் கோபன்ஹேகனில் உள்ள விமான நிலையத்தில் கடந்த திங்கள்கிழமை டிரோன்கள் காணப்பட்டன. இதையடுத்து பாதுகாப்பு கருதி பல மணி நேரம் விமான நிலையம் மூடப்பட்டது. இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் டென்மார்க்கின் வடக்கு பகுதியில் உள்ள ஆல்போர்க் விமான நிலையம் உள்பட 4 விமான நிலையங்களில் டிரோன்கள் நேற்றுமுன்தினம் ஊடுருவியுள்ளன. விமான நிலையத்தின் வான்வெளி பகுதியில் அங்கீகரிக்கப்படாத டிரோன்கள் காணப்பட்டதையடுத்து ஆல் போர்க் விமான நிலையம் மூடப்பட்டது. டிரோன்களின் இயக்கத்தின் பின்னணியில் ரஷ்யா இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. (ஐ)

## ரஷ்யாவுடனான போர் முடிவுக்கு வந்தால் உக்ரைன் அதிபர் பதவியில் இருந்து விலகி விடுவேன்:



ஐநா பொது சபை கூட்டத்தில் கலந்து கொண்டு பேச உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அமெரிக்கா சென்றுள்ளார். அங்கு அவர் கூறியதாவது: ரஷ்யாவுடனான போர் முடிந்ததும் உக்ரைன் அதிபர் பதவியில் இருந்து விலகி விடுவேன். எனது இலக்கு போரை முடிப்பதே தவிர, பதவிக்கு தொடர்ந்து போட்டியிடுவது அல்ல. உக்ரைனில் காலவரையின்றி அதிகாரத்தில் நீடிக்க விரும்பவில்லை. ஆனால் ரஷ்யாவுக்கு அமைதியில் எந்த ஆர்வமும் இல்லை. சர்வாதிகாரிகள் அணிவகுப்புகளில் காட்ட விரும்பும் பெரிய, கொழுத்த ஏவுகணைகள் உக்ரைனிடம் இல்லை. அதற்கு பதிலாக, நமது வாழ்க்கை உரிமையைப் பாதுகாக்க டிரோன்களை உருவாக்க வேண்டியிருந்தது. உண்மைகள் எளிமையானவை: உலகின் துறைமுகங்கள் அல்லது கப்பல்களைப் பின்னர் பாதுகாக்க முயற்சிப்பதை விட இப்போது புடினை நிறுத்துவது எளிதானது. இது உலகளாவிய ஆயுதப் போட்டியை விட எளிதானது. இவ்வாறு கூறினார். (ஐ)

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பல்கலைக்கழக வளாகத்தினுள் நண்பகல் 12 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு, பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்குப் பல்கலைக்கழக சமூகத்தினரால் மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் போராட்டம் யாழ். செம்மணியில் நேற்று ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கையில்நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி விவகாரத்துக்கு நீதி கோரியும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தப் போராட்டத்தில், வடக்கின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டுள்ள நிலையில், போராட்டத்தின் ஆரம்பத்தில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கு முன்னாள் போராளி ஈஸ்வரன் அஞ்சலி செலுத்திப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

## தியாகதீபத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தியாக தீபம் திலீபனின் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு மாவீரர் ஒருவரின் தாய் பொதுச்சுடர் ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து தியாக தீபத்தின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை, சம நேரத்தில் நல்லூர் வடக்கு வீதியில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்திலும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் தூக்குக் காவடி ஒன்று நினைவிடத்துக்கு வந்ததுடன் , யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஊர்திப் பவனிகள் வந்திருந்தன.

இந்த நிகழ்வில் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அரசியல் கைதிகளின் உறவுகள், அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிதாகத் திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாகப் பொலிஸ்நிலையங்களைத்திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, தியாக தீபம் திலீபன் 1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி நல்லூர் ஆலய வீதியில் நீராகாரம் இன்றி உண்ணாவிரதம் இருந்தார். அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் 12 நாட்களின் பின்னர் 26ஆம் திகதி அவர் சாவைத் தழுவிக்கொண்டார்.

## 'கெஹெல்பத்தர பத்மே' மறைத்து வைத்திருந்ததாகக் கூறப்படும் துப்பாக்கிகள் பொலிஸாரால் மீட்பு!

பாதாள உலகக் குழு உறுப்பினரான 'கெஹெல்பத்தர பத்மே' மறைத்து வைத்திருந்ததாகக் கூறப்படும் 500க்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மேல் மாகாண வடக்கு குற்றவியல் பிரிவு முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைய இந்த தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதன்படி பேலியகொடை மீன் சந்தைக்கு அருகில் இருந்து வு-56 ரக 4 மெகசின்களும், மைக்ரோ பிஸ்டலையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான 'கெஹெல்பத்தர பத்மே' என அழைக்கப்படும் மன்தினு பத்மசிறி உள்ளிட்ட பல பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் சமீபத்தில் இந்தோனேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டு பின்னர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர்களை தடுத்து வைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வேலணையில் திலீபன் நினைவேந்தல்





யாழ்ப்பாணம், செப். 26

யாழ்ப்பாணம், வேலணை - வங்களாவடி பகுதியில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு இன்று நடைபெற்றது. இதன்போது, பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன் நிகழ்வில் மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# தியாக தீபத்துக்குப் பருத்தித்துறையில் அஞ்சலி





பருத்தித்துறை, செப். 26

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு பருத்தித்துறையில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவுத் தூபி முன்பாக இன்று நடைபெற்றது.

நினைவுத் தூபி முன்பாக காலை 8 மணிக்கு அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு, தியாக தீபம் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

# ஆப்பன்ஹைமரின்....

இந்தப் படத்தில் விரிவாகப் பேசப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் கவனிக்கவேண்டும்.

முதலாம் உலகப் போர் காலத்தில் பெண் அறிவியலாளர்களுக்கு ஊதியம் குறைவாக இருந்தது என்று பார்த்தோம். "இப்போதும் அந்த நிலை கொஞ்சம் இருக்கிறது" என்கின்றன ஆய்வுகள். 2022இல் நடந்த ஓர் ஆராய்ச்சியில் 3000 பல்கலைக்கழகக் கல்வியாளர்களின் சூழல் ஆராயப்பட்டது. இதில், ஒரே அளவிலான ஆராய்ச்சி செயல்திறன் இருந்தாலும், பெண் கல்வியாளர்களுக்குக் கிடைக்கும் ஊதிய உயர்வு குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது. ஆண் அறிவியல் பேராசிரியர்களுக்கு ஒரு ரூபாய் ஊதிய உயர்வு கிடைக்கிறது என்றால், அதே நிலையில் உள்ள பெண் அறிவியல் பேராசிரியர்களுக்கு 89 பைசா மட்டுமே ஊதிய உயர்வு கிடைப்பதாக அந்த ஆய்வு தெரிவிக்கிறது. எல்லா இடங்களிலும் இதே சூழல் இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. ஆனால், இன்னமும் சிறிதளவேனும் ஊதிய இடைவெளி இருக்கிறது என்பது நிச்சயம் வேதனையானது. ஒரு ஸ்டெம் துறையில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கும்போது இயல்பாகவே இந்த ஊதிய இடைவெளி குறைகிறது என்று சொல்கிறது 2016ஆம் ஆண்டில் வெளிவந்த ஹெவிட்டின் ஆய்வு. ஆனால், பெண்களின் பங்களிப்பு அதிகமாக வேண்டுமானால் பாரபட்சமின்றி அவர்கள் வேலைக்கு எடுக்கப்பட வேண்டுமே?

அறிவியல் துறையில் பெண்களை வேலைக்கு எடுப்பதில் இருக்கும் பாரபட்சம் பெருமளவில் குறைந்திருக்கிறது என்றாலும் அது முழுமையாக நீங்கவில்லை. அது மட்டுமல்லாமல், குறைவான பாரபட்சமாக இருந்தாலும் அது தரும் பாதிப்பு அதிகம் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

உதாரணமாக ஓர் ஆராய்ச்சியைப் பார்க்கலாம். 1996ஆம் ஆண்டில் ரிச்சர்ட் மார்டெல், டேவிட் லேன் மற்றும் சிந்தியா எம்ரிச் ஆகியோர் ஒரு கணிப்பொறி சோதனையை நடத்தினார்கள். ஒரு நிறுவனத்தில் எட்டு படிநிலைகள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். மேலே போகப் போக பணியிடங்களின் எண்ணிக்கை குறையும். முதல் படிநிலையில் 500 பேர் இருப்பர்கள் என்றால் எட்டாவது படிநிலையில், அதாவது நிறுவனத்தின் உச்ச பொறுப்புகளில் பத்துப் பேர் மட்டுமே இருப்பார்கள். ஆரம்பகட்டத்தில் ஒரே எண்ணிக்கையில் ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் பணி உயர்வுக்காகக் காத்திருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளலாம். முதல் கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்துக்குப் போகும்போது பெண்கள்மீது 1% மட்டுமே பாரபட்சம் காட்டப்படுகிறது. இது அடுத்தடுத்த படிநிலைகளில் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தும். 1% மட்டுமே பாரபட்சம் இருந்தாலும், இறுதிக்கட்டமான எட்டாவது நிலையில் பெண்களின் எண்ணிக்கை 35 சதவீதமாகக் குறையும் என்கிறது இவர்களின் ஆய்வு. அதாவது முதல் கட்டத்தில் இருக்கும் ஒரு சதவீத பாரபட்சம், இறுதிக் கட்டத்தை எட்டும்போது பல மடங்கு உயர்ந்துவிடுகிறது.

இன்னோர் ஆராய்ச்சியையும் பார்க்கலாம். 2004ஆம் ஆண்டில் மைக்கெல் நார்டன், ஜோசப் வாண்டெல்லோ, ஜான் டார்லி ஆகியோர் இணைந்து ஓர் ஆய்வை மேற்கொண்டனர். அதில் ஒரு சோதனை நடத்தப்பட்டது. ஒரு கட்டுமான நிறுவனத்தின் உயர்நிலைப் பணியாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர் ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கலாம். இந்தப் பின்னணியில் 93 ஆண்களிடம் சில விண்ணப்பங்களைக் கொடுத்து, "யாரை வேலைக்குத் தேர்ந்தெடுப்பீர்கள்?" என்று ஆராய்ச்சியாளர்கள் கேள்வி எழுப்பினார்கள். சோதனையின் முடிவில், விண்ணப்பத்தில் உள்ள கல்வித்தகுதி, அனுபவம் ஆகிய கூறுகள் எப்படிப்பட்டவையாக இருந்தாலும், ஆண்களுக்கே வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட்டது தெரியவந்தது.

"கல்வித்தகுதி குறைவாக இருந்தாலும் ஒரு கட்டுமானம் சார்ந்த உயர்நிலைப் பொறுப்புக்கு ஆண் பணியாளர்தான் சரியாக இருப்பார்" என்பதை அவர்கள் காரணமாக சொன்னார்கள். "வேலைவாய்ப்பில் இருக்கும் பால்சார்ந்த பாரபட்சத்தை இது சுட்டிக்காட்டுகிறது" என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

இத்தனை பாரபட்சங்களையும் தாண்டி பெண்கள் அறிவியல் துறைக்குள் நுழைந்தாலும் அவர்களால் தொய்வின்றி ஆய்வுகளை மேற்கொள்ள முடியுமா?







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.09.2025 வெளியிடப்பெற்றது.